அனுப்புநர்

முனைவர் க.அறிவொளி,

இயக்குநர்,

தொடக்கக் கல்வி இயக்ககம்,

சென்னை - 6.

பெறுநர்

1. ஆணையர்,
   பள்ளிக் கல்வி ஆணையரகம்.
2. இயக்குநர்,
   மாநிலத் திட்ட இயக்ககம்.
3. தலைவர்,
   ஆசிரியர் தேர்வு வாரியம்.
4. இயக்குநர்,
   மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.
5. இயக்குநர்,
   தனியார் பள்ளிகள் இயக்ககம்.
6. இயக்குநர்,
   பள்ளி சாரா கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்.
7. சார்ந்த இணை இயக்குநர்கள்,
   பள்ளிக் கல்வி.

……………

ந.க.எண் : DEE - I1/ HCM visits / 2023, நாள் : 22.02.2023

அய்யா / அம்மையீர்,

பொருள் : மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் மதுரை மண்டல ஆய்வுகள் - பள்ளிக் கல்வி - கல்வி இணை செயல்பாடுகள் ஆய்வுக் கூட்டம் - 6.03.2023 அன்று மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் நடைபெறுதல் - இயக்குநர்கள் மற்றும் இணை இயக்குநர்கள் நியமனம் - தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

பார்வை: சென்னை 9, பொது (Special.B)துறை செயலர் அவர்களது கடித எண்.151/Special-B/2023-6, நாள்.20.02.2023.

……………

பார்வையில் காணும் அரசு கடிதத்தின்படி மாண்புமிகு தமிழ்நாடு முதல்வரின் மூன்றாவது மண்டல ஆய்வு மதுரை மாவட்டத்தில் வரும் 05.03.2023 மற்றும் 06.03.2023 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையில் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கற்றல் - கற்பித்தல் தொடர்பாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அதே போன்று கல்வி இணைச் செயல்பாடுகளான விளையாட்டு மற்றும் உடல்நலக் கல்வி, நாட்டு நலப்பணித் திட்டம், சாரண

சாரணியர் இயக்கம் மற்றும் இளையோர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றில் மாணவர்கள் பங்கேற்று தங்கள் ஆளுமைத் திறன்களை வளர்த்துக் கொள்ள வாய்ப்புகள் உருவாக்கிக் கொடுக்கப்படுகின்றது.

இதன்பொருட்டு மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் மாணவர்களின் கல்வி இணைச் செயல்பாடுகளை ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது.இம்மாவட்டங்களில் 04.03.2023 அன்று மாவட்ட பள்ளிப் பார்வையும் 06.03.2023 முற்பகல் ஆய்வுக் கூட்டம் நடத்தப்படும். 04.03.2023 அன்று இந்த மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் 1 முதல் 9 ஆம் வகுப்புகளுக்கு திங்கள் கிழமை கால அட்டவணையுடன் செயல்படும். இதை ஈடு செய்யும் வகையில் இந்த மாவட்டங்களுக்கு 13.03.2023 அன்று விடுமுறை அளிக்கப்படும். 10,11,12 வகுப்புகள் அந்த அந்த மாவட்டங்களில் ஏற்கனவே திட்டமிட்டபடி நடைபெறவேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்திற்கான களப்பணிகளை கீழ்க்காணும் குழுவினர் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள மாவட்டங்களில் மேற்கொள்வார்கள். 04.03.2023 அன்று இம்மாவட்ட பள்ளிகளில் நடைமுறையில் உள்ள கல்வி இணை செயல்பாடுகளை பார்வையிடுவர். 06.03.2023 காலை தொடர்புடைய கள அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் பள்ளிக் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

| வ. எண் | மாவட்டம் | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி | பெயர் மற்றும் பதவி (இணை இயக்குநர் நிலையில்) திரு/திருமதி |
|---|---|---|---|
| 1 | மதுரை | க.நந்தகுமார், இ.ஆ.ப.,<br>ஆணையர்,<br>பள்ளிக் கல்வி,<br>சென்னை – 6. | 1. கே.ஸ்ரீதேவி<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை – 6.<br>2. S.சாந்தி,<br>இணை இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 6. |
| 2 | திண்டுக்கல் | முனைவர் க.அறிவொளி,<br>இயக்குநர்,<br>தொடக்கக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 6. | 1. முனைவர் வை.குமார்,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை – 6.<br>2. முனைவர் ஆர்.பாஸ்கரசேதுபதி,<br>இணை இயக்குநர்,<br>மாநிலத் திட்ட இயக்ககம் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>சென்னை – 6. |

| | | | |
|---|---|---|---|
| 3 | இராமநாதபுரம் | முனைவர் பெ.குப்புசாமி,<br>இயக்குநர்,<br>பள்ளி சாரா கல்வி மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்,<br>சென்னை -6. | 1. முனைவர் ச.சுகன்யா,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை – 6.<br>2. நா.ஆனந்தி,<br>இணை இயக்குநர்,<br>தனியார் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை – 6. |
| 4 | சிவகங்கை | முனைவர் S.நாகராஜ முருகன்,<br>இயக்குநர்,<br>தனியார் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை – 6. | 1. க.சசிகலா,<br>இணை இயக்குநர்,<br>தனியார் பள்ளிகள் இயக்ககம்,<br>சென்னை – 6.<br>2. பொ.பொன்னையா,<br>இணை இயக்குநர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம்,<br>சென்னை – 6. |
| 5 | தேனி | S.உமா,<br>கூடுதல் மாநிலத் திட்ட இயக்குநர்,<br>ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,<br>சென்னை – 6. | 1. வெ.ஜெயக்குமார்,<br>இணை இயக்குநர்,<br>பள்ளிக் கல்வி ஆணையரகம்,<br>சென்னை -6.<br>2. த.ராஜேந்திரன்,<br>இணை இயக்குநர்,<br>மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்,<br>சென்னை – 6. |

மேற்கண்ட அலுவலர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட மாவட்டங்களை 04.03.2023 அன்று ஆய்வு செய்து 06.03.2023 அன்று காலை நடைபெறும் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆக்கப்பூர்வமான கருத்துகளை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மதுரை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை மாவட்டத்தில் உள்ள ஏதாவது ஒரு கல்லூரி / பள்ளி கூட்டரங்கில் ஆய்வுக் கூட்டத்தினை நடத்திடும் வகையில் ஆய்வுக் கூட்டத்திற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளையும் மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைத்து வகை மாவட்டக் கல்வி அலுவலர்கள், வட்டாரக் கல்வி அலுவலர்கள், முதன்மைக் கல்வி அலுவலர்களின் நேர்முக உதவியாளர்கள் (இடைநிலை மற்றும் மேல்நிலை), மாவட்டக் கல்வி அலுவலர்களின் நேர்முக உதவியாளர்கள், ADPC, APO, DC மற்றும் Fellowship ஆகியோர் கலந்து கொள்ள வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

தொடக்கக் கல்வி இயக்குநர்

நகல்:

1. அரசு முதன்மைச் செயலாளர்,
   பள்ளிக் கல்வித் துறை
   தலைமைச் செயலகம், சென்னை – 9. (தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது)
2. மாவட்ட ஆட்சித் தலைவர்,
   மதுரை (முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)
3. முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
   (மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல், தேனி மற்றும் சிவகங்கை)
4. நேர்முக உதவியாளர்,
   மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அலுவலகம்,
   தலைமைச் செயலகம், சென்னை – 9. (தகவலுக்காக அனுப்பப்படுகிறது)